IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

C.C.No. 35-2025

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : பாக்கியவதி | Defence | : |
| Father/Husband Name | : வாஞ்சிநாதன் | Court | : |
| Village | : நாகப்பட்டிணம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 46/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 20.08.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை (U/s 355 of BNSS petition filed and allowed)

முதல் விசாரணை:-

நான் கனரா வங்கி நாகப்பட்டிணம் கிளையில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.08.2021ம் தேதி நான் கனரா வங்கி கருவிழந்தநாதபுரம் கிளையில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்த போது எங்களது வங்கியின் வருடாந்திர அய்வு நடக்க இருந்ததால் எங்கள் வங்கியில் கல்வி கடன் பெற்ற நபர்கள் கல்லூரி படிப்பை முடித்ததற்கான சான்றிதழை வாங்கி வைக்கவேண்டும் என்பதற்காக எங்களது வங்கியில் கல்வி கடன் பெற்ற பிரதீபா என்ற மாணவியின் கல்லூரி படிப்பை முடித்த சான்றிதழ் கேட்பதற்காக நான் பிரதீபாவின் தந்தை மனோகரன் என்பவருக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டேன். அப்போது மனோகரன் நான் கடன் தொகையை திருப்பி கேட்பதாக தவறாக நினைத்துக்கொண்டு என்னிடம் கடனை கேட்டால் சங்கை அறுத்து விடுவேன் என கூறினார். நான் போனை வைத்துவிட்டேன். அன்று மதியம் சுமார் 02.45 மணியளவில் மனோகரன் எங்களது வங்கிக்கு வந்து யார் எனக்கு போன் செய்தார்கள் என கேட்டு மீண்டும் சங்கை அறுத்துவிடுவேன் என கூறினார். அப்போது நகை மதிப்பீட்டாளர் ஜெயக்குமார் மேடம் என்ன தவறாக கூறிவிட்டார்கள், ஏன் அவர்களை இப்படி பேசுகிறீர்கள் என் கேட்டார். அப்போது மனோகரன் போன் செய்து நிறைய நபர்களை வரவழைத்தார். அவர்களிடம் இவன அடிங்கடா என கூறியவுடன் வந்த நபர்கள் நகை மதிப்பீட்டாளரை அடித்தார்கள். அந்த கூட்டத்தில் இருந்த ஒரு நபர் எங்கள் வங்கி மேஜையில் இருந்த கத்தியை எடுத்து

லோனை திருப்பி கேட்டால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார். இந்த சம்பவம் எங்களது வங்கியில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகி உள்ளது. எங்கள் வங்கியின் உதவி மேலாளர் சம்பவத்தை அவரது செல்போன் மூலம் வீடியோ எடுத்தார். அந்த சிசிடிவி பதிவு எங்களிடம் உள்ளது.இந்த சம்பவத்திற்கு பிறகு நீண்ட நாட்கள் வங்கிக்கு வருவதற்கு பயமாக இருந்தது. சம்பவம் சம்பந்தமாக நான் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கிறஞர் ஆஜர். குறுக்கு விசாரணை ஒத்தி கேட்கபட்டது. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 35-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 2 | | Examined as : PW 2 | |
| Name | : விஜயலெட்சுமி | Defence | : |
| Father/Husband Name | : கணேஷ்குமார் | Court | : |
| Village | : கருவி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 46/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 20.08.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை (U/s 355 of BNSS petition filed and allowed)

முதல் விசாரணை:-

நான் கனரா வங்கி கருவி கிளையில் Business Correspondent ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.08.2021ம் தேதி நான் கனரா வங்கி கருவிழந்தநாதபுரம் கிளையில் Business Correspondent ஆக பணிபுரிந்த போது அன்று மதியம் சுமார் 02.45 மணியளவில் எங்கள் வங்கியில் சத்தமாக இருந்தது. நான் உள்ளே சென்று பார்த்தபோது மனோகரன் வங்கி மேலாளர் பாக்கியவதி அவர்களிடம் பிரச்சனை செய்துகொண்டிருந்தார். அதை நகை மதிப்பீட்டாளர் ஜெயக்குமார் சத்தமாக பேசாதீர்கள் என மனோகரனிடம் கூறியவுடன் மனோகரன் போன் மூலம் சில நபர்களை வர சொல்லியிருந்தார். அவர்களிடம் மனோகரன் இவன அடிங்கடா என்று சொன்னவுடன் ஆஜர் எதிரி ராஜசேகரன் மற்றும் சிலர் ஜெயக்குமாரை அடித்தார்கள். 1 வது எதிரி ராஜசேகரன் நகை மதிப்பீட்டாளரின் மேஜையில் இருந்த கத்தியை எடுத்து சான்றிதழ் எதுவும் எங்களிடம் கேட்ட கூடாது. கேட்டால் உங்களை கொலை செய்து விடுவோம் என கூறி கத்தியை காட்டி மிரட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கிறஞர் ஆஜர். குறுக்கு விசாரணை ஒத்தி கேட்கபட்டது. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

THARANGAMBADI.

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

**C.C.No. 35-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 3 | | Examined as : PW 3 | |
| Name | : திினேஷ் | Defence | : |
| Father/Husband Name | : மாரி | Court | : |
| Village | : கும்முடிபூண்டி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 32/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 20.08.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை (U/s 355 of BNSS petition filed and allowed)

முதல் விசாரணை:–

நான் கனரா வங்கி பொன்னேரி கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அசா1 எங்கள் வங்கியில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்தார். கடந்த 16.08.2021ம் தேதி நான் கனரா வங்கி கருவிழந்தநாதபுரம் கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்த போது எங்களது வங்கியின் வருடாந்திர அய்வு நடக்க இருந்ததால் எங்கள் வங்கியில் கல்வி கடன் பெற்ற நபர்கள் கல்லூரி படிப்பை முடித்ததற்கான சான்றிதழை வாங்கி வைக்கவேண்டும் என்பதற்காக எங்களது வங்கியில் கல்வி கடன் பெற்ற பிரதீபா என்ற மாணவியின் கல்லூரி படிப்பை முடித்த சான்றிதழ் கேட்பதற்காக அசா1 பிரதீபாவின் தந்தை மனோகரன் என்பவருக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டார். அப்போது மனோகரன் அசா1 கடன் தொகையை திருப்பி கேட்பதாக தவறாக நினைத்துக்கொண்டு அசா1 யிடம் கடுமையான வார்த்தைகளால் பேசியதாக அசா1 என்னிடம் கூறினார். அன்று மதியம் சுமார் 02.45 மணியளவில் மனோகரன் மது அருந்திவிட்டு எங்களது வங்கிக்கு வந்து யார் எனக்கு போன் செய்தார்கள் என கேட்டு சத்தம் போட்டு தகாத வார்த்தைகளால் திட்டினார். அப்போது நகை மதிப்பீட்டாளர் ஜெயக்குமார் மேடம் என்ன தவறாக கூறிவிட்டார்கள், ஏன் அவர்களை இப்படி பேசுகிறீர்கள் என் கேட்டார். அப்போது மனோகரன் போன் செய்து நிறைய நபர்களை வரவழைத்தார். அவர்களிடம் இவன

அடிங்கடா என கூறியவுடன் 1வது எதிரி நகை மதிப்பீட்டாளரை அடித்தார். நான் தை தட்டிகேட்ட போது நீ யார் அதைகேட்பதற்கு என கூறி என்னிடமும் கடுமையான வார்த்தைகளால் பேசினார்கள். நகை மதிப்பீட்டாளரின் மேஜையில் இருந்த நகைகள் மற்றும் ஆவணங்களை வாரி இறைத்தார்கள். இந்த சம்பவம் எங்களது வங்கியில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகி உள்ளது. நான் சம்பவத்தை எனது செல்போன் மூலம் வீடியோ எடுத்தேன். அந்த சிசிடிவி பதிவு மற்றும் எனது செல்போனில் உள்ள பதிவும் எங்களிடம் உள்ளது. சம்பவம் சம்பந்தமாக அசா1 செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கிறஞர் ஆஜர். குறுக்கு விசாரணை ஒத்தி கேட்கபட்டது. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

THARANGAMBADI.

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

**C.C.No. 35-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 4 | | Examined as : PW 4 | |
| Name | : ஜெயக்குமார் | Defence | : |
| Father/Husband Name | : பாலசுப்மணியன் | Court | : |
| Village | : கருவி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 46/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 20.08.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை (U/s 355 of BNSS petition filed and allowed)

முதல் விசாரணை:–

நான் கனரா வங்கி கருவி கிளையில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். அசா1 எங்கள் வங்கியில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்தார். கடந்த 2021 வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை ஒரு நாள் மதியம் 02.45 மணியளவில் நான் வங்கியில் நகை மதிப்பீடு செய்து கொண்டிருந்தபோது எதிரி மனோகரன் வங்கிக்கு வந்து, மேலாளரிடம் அபாச வார்த்தைகளால் திட்டிகொண்டிருந்தார். எனக்கு போன் செய்து கடனை திருப்பி கேட்டால் சங்கை அறுத்து விடுவேன் என திட்டினார். அதை நான் கேட்டதற்கு எதிரி மனோகரன் நீ யாருடா, மயிராண்டி அதை கேட்பதற்கு, நீ தின கூலிதானே என பேசினார். மேலும் சில நபர்களை போன் செய்து வங்கிக்குள் அழைத்து வந்தார். அப்போது எதிரி மனோகரன் இவன அடிங்கடா என கூறினார். எதிரி ராஜசேகரன் மற்றும் அவரது மகன் ராஜேஷ் இருவரும் மாறி மாறி என்னை அடித்தார்கள். அதற்கான வீடியோ பதிவுகள் வங்கியின் சிசிடிவியில் பதிவாகியுள்ளது. எதிரி தாக்கியதில் நான் நிலைக்குலைந்துவிட்டேன். அதனால் நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்ட பின்னர் செம்பனார்கோவில் காவல் நிலையத்திற்கு சென்றோம். முதுநிலை மேலாளரர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை தாக்கியும், எங்களது அரசு பணியை செய்யவிடாமலும் இருந்த நபர்களுக்கு தகுந்த தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரிகள் தரப்பு வழக்கிறஞர் ஆஜர். குறுக்கு விசாரணை ஒத்தி கேட்கபட்டது. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**